## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

1) கீழ்க்கண்டவற்றில் எந்த மாநிலத்தின் தலைமை தேர்தல் அதிகாரி **"Enajori initiative"**-ஐ உடல் ஊனமுற்றவர்களுக்காக அறிமுகப்படுத்தினார்?

A] கேரளா

B] அஸ்ஸாம்

C] பீகார்

D] மேற்கு வங்காளம்

- ✓ அஸ்ஸாம் மாநிலத்தின் தலைமை தேர்தல் அதிகாரி திரு. முகேஷ் சாஹூ முதன் முதலாக "**Enajori Initiative"** – யை கௌஹாத்தியில் அறிமுகப்படுத்தினார். இது உடல் ஊனமுற்றவர்களுக்காக தனித்துவமாக உருவாக்கப்பட்டது. இதன் குறிக்கோள் "ஒரு வாக்காளர் கூட விடுபடக்கூடாது" என்பதாகும்.
- ✓ இந்த முன்முயற்சியானது, தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் சமூக சேவை அமைப்பும் சேர்ந்து 2019 ஆண்டு லோக் சபா தேர்தலில் குறிப்பாக உடல் ஊனமுற்றவர்களுக்காக அமலாக்கப்பட்டது. வாக்குச்சாவடி அலுவலர்கள், "**Divyang Sarothis**" மற்றும் சந்திரபிரபா என்ற பெண்கள் அமைப்பும் இணைந்து **Enajori** முன்முயற்சியினை நடைமுறைப்படுத்தினர்.
- ✓ **"Enajori" –** இன் கீழ் உணர்திறன் நிகழ்ச்சி நிரல் **(Sensitization Programmes) SWD [Social Welfare Department]** மூலம் நடத்தப்பட்டு **Braille system** பற்றி மூலம் உடல் ஊனமுற்றவர்கள் அறிந்து கொள்ள முடியும். ஒரு பிரத்தியேக முயற்சியினால் **Braille** வாக்காளர் சீட்டுகள் மற்றும் **Braille** வாக்குச்சீட்டுகள் மூலம் பார்வை குறைபாடு உடையவர்கள் சுலபமாக வாக்களிக்க உதவுகிறது.

2) கீழ்க்கண்டவற்றில் இந்தியாவின் எந்த விளையாட்டு கழகம் **ASSOCHAM** -ஆல் வழங்கப்பட்ட சிறந்த விளையாட்டு ஒருங்கிணைப்பாளருக்கான விருதை பெற்றது?

A] அனைத்து இந்திய டென்னிஸ் கழகம் - **All India Tennis Association**

B] அனைத்து இந்திய கால்பந்து கழகம் - **All India Football Federation**

C] இந்திய தேசிய துப்பாக்கி சங்கம் - **National Rifle Association of India**

**D]** இந்திய தேசிய பூப்பந்து சங்கம் - **Badminton Association of India**

- ✓ இந்திய தேசிய துப்பாக்கி சங்கம் (**NRAI)** சிறந்த விளையாட்டு ஒருங்கிணைப்பாளருக்கான விருதை பெற்றது. இது இக்கழகத்துக்கு இன்னுமொரு மணிமகுடமாகும்.
- ✓ இந்திய தேசிய துப்பாக்கி சங்கம் (**NRAI**) ஆனது சர்வதேச துப்பாக்கி சுடுதல் சங்கம் **(ISSF)**, ஆசிய துப்பாக்கி சுடுதல் சங்கம் **(ASC)**, காமன்வெல்த் துப்பாக்கி சுடுதல் சங்கம் **(CSF)**, தெற்கு ஆசியா துப்பாக்கி சுடுதல் சங்கம் மற்றும் இந்திய ஒலிம்பிக் சங்கம் **(IOA)** ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டது. இவ்வமைப்பானது 1951 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு இந்தியாவில் துப்பாக்கி சுடும் விளையாட்டை பிரபலமாக்கியது.

3) "இந்திய நிதி கூட்டமைப்பு" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்? **[Author of Indian Fiscal Federalism]**

**A]** உர்ஜித் படேல்

**B]** ராஜீவ் மெஹரிஷி

**C]** Y.V. ரெட்டி

**D]** நிரிபேன்ந்ரா மிஸ்ரா

- ✓ **"**இந்திய நிதி கூட்டமைப்பு" என்ற புத்தகத்தின் ஆசிரியர் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் Dr.Y.V.ரெட்டி மற்றும் இணை ஆசிரியர் Dr.G.R.ரெட்டி ஆவார்.
- ✓ நிதி ஆணையத்தின் [ **Finanace commision]** பரிந்துரைகளுக்கு வெளியே, மத்திய மற்றும் மாநிலங்களில் இருந்து அனைத்து பரிமாற்றங்களுக்கும் நிதி ஆயோக் முக்கிய மையமாக இருக்க வேண்டும் ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**4]** கீழ்கண்டவர்களுள் எந்த இந்திய ஆசிரியர் "மிகவும் நம்பிக்கைக்குரிய தனிநபர்" என்ற விருதை மார்த்தா பார்ரெல் விருது விழாவில் 2019 ஆம் ஆண்டு பெற்றார்? **['Most Promising Individual' Award]**

**A]** D.P.சட்டோபத்யாயா

**B]** ஆனந்த் குமார்

**C]** மனு குலாடி

**D]** ராம் புனியனி

- ✓ டெல்லி அரசு பள்ளியில் பணியாற்றி வரும் மனு குலாடி 2019 ஆம் ஆண்டிற்கான மார்த்தா பார்ரெல் விருது விழாவில் "மிகவும் நம்பிக்கைக்குரிய தனிநபர்" என்ற விருது பெற்றுள்ளார். இவ்விருது இவருக்கு டெல்லி பள்ளிகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு “பாலின சமத்துவத்தை” கற்பித்தற்காக வழங்கப்பட்டுள்ளது.
- ✓ மார்த்தா பார்ரெல் விருதானது சிறந்த சமூக சேவையாளர், பெண்கள் உரிமை, பாலின சமத்துவம் மற்றும் முதியோர் கல்வி ஆகியவற்றிக்காக போராடி இந்தியா மற்றும் சர்வதேச அளவில் மதிக்கப்பட்ட Dr. மார்த்தா பார்ரெலின் நினைவாக வழங்கப்படுகிறது.
- ✓ இவ்விருதானது இரண்டு வகையான பிரிவில் வழங்கப்படுகிறது – "மிகவும் நம்பிக்கைக்குரிய தனிநபர்" மற்றும் “பாலின சமத்துவத்திற்கான சிறந்த அமைப்பு” – பாலின சமத்துவம் தொடர்பான சிக்கல்களுக்கு உழைக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.
- ✓ பாலின சமத்துவம் பிரிவில், 2019 விருது, கிராமப்புற பெண்களின் கூட்டுப்பணியாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு பெண் தலைமையிலான அமைப்பான மஹிலா ஜான் ஆதிக்கார் சமிதிக்கு (**MJAS**) வழங்கப்பட்டுள்ளது**.** இந்நிறுவனமானது பெண்களுக்கு எதிரான வன்முறையை எதிர்ப்பதற்காக 2000 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக மாற்றப்பட்டது.

**5)** கீழ்க்கண்டவற்றில் எந்த இரயில் நிலையம் தங்க மதிப்பீட்டை இந்திய பசுமை கட்டிடம் கவுன்சிலிடம் (**IGBC**) இருந்து பெற்றது? **[Gold Rating by the Indian Green Building Council (IGBC)]**

**A]** ஜெய்ப்பூர்

**B]** தில்லி

**C]** குவாலியர்

**D]** விஜயவாடா

- ✓ பசுமை நடவடிக்கைகளுக்காக இந்திய பசுமை கட்டிடம் கவுன்சில் **(IGBC)** விஜயவாடா ரயில்வே நிலையம் தங்கம் மதிப்பீட்டை பெற்றுள்ளது. இதற்கு இந்நிலையமானது **100%** எல்.ஈ.டி லைட்டிங், ஐந்து நட்சத்திர மதிப்பிட்ட காற்றாடிகள், பம்புகள் மற்றும் மோட்டார்கள் மற்றும் சூரிய நீர் சூடாக்க அமைப்புகள் ஆகியவற்றால் புதுப்பிக்கப்பட்டுள்ளது.
- ✓ இது நாட்டில் பரபரப்பான இரயில் சந்திப்புகளில் ஒன்றாகும். இந்திய இரயில்வேயின் சுற்றுச்சூழல் இயக்குநரகத்தின் உதவியுடன் ஐ.ஜி.சி.சி (**Green Rail**way **Stations Rating System) (GRSRS)** என்று

அழைக்கப்படும் அமைப்புடன் அதிகமான சுற்றுச்சூழல் நட்பு வழிகளை பின்பற்றுவதற்கு ரயில்வே நிலையங்கள் ஊக்குவிக்கப்படும். ரெயில்வே துறையின் இந்த நடவடிக்கைகளினால் சுற்றுச்சூழலுக்கு பாதகமான விளைவுகளை குறைப்பதும், பயணிகளுக்கு பயணத்தின் அனுபவத்தை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

- ✓ மதிப்பீடு முறையானது நீர் பாதுகாப்பு, தேசிய கழிவு, எரிபொருள் திறன், புதைபொருள் எரிபொருளைப் பயன்படுத்துதல், சுகாதாரம் மற்றும் மூல பொருட்களின் பயன்பாடு ஆகியவற்றின் மீதான குறைவான சார்பு மற்றும் மக்களின் நலன்களைப் போன்ற தேசிய முன்னுரிமைகள் பற்றி மதிப்பிடுவதற்கு உதவுகிறது.

6) கீழ்கண்டவர்களுள் எந்த இந்தியர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் போட்லே பதக்கத்தினை 2019 ஆம் ஆண்டு வென்றார்? **[Oxford University's Bodley Medal 2019]**

**A]** அமர்த்தியா சென்

**B]** ரகுராம் ராஜன்

**C]** மன்மோகன் சிங்

**D]** அர்விந்த் சுப்ரமணியன்

- ✓ நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்த்தியா சென்னுக்கு, ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் உலக புகழ் பெற்ற பாடிலியன் நூலகங்கள் வழங்கிய போட்லே பதக்கம், மிக உயர்ந்த கௌரவத்துடன் வழங்கப்பட்டது. சென் ஆக்ஸ்போர்டில் நடைபெற்ற **"Founder's Lunch"** என்ற நிகழ்வில் இந்த பதக்கத்தினை பல்கலைக்கழக துணைவேந்தர் கிரிஸ் பேட்டன் மற்றும் ரிச்சர்ட் ஓவென்டென் போட்லேவின் நூலகர் ஆகியோரிடம் இருந்து பெற்றார்.
- ✓ மேலும் 2019 ஆம் ஆண்டு போட்லே பதக்கம் பெற்ற மற்றொருவர் நோபல் பரிசு பெற்ற நாவலாசிரியர் கஸோ இஷிகுரோ. இவர் இப்பதக்கத்தினை ஏப்ரல் 3 ஆம் தேதி ஆக்ஸ்போர்டில் நடைபெற்ற இலக்கிய விழாவில் பெற்றார்.
- ✓ இப்பதக்கமானது இலக்கியம், கலாச்சாரம், விஞ்ஞானம் மற்றும் தகவல் தொடர்பு ஆகிய துறைகளில் உலக அளவில் மிகப்பெரிய பங்களிப்பாளர்களுக்கு வழங்கப்படுகிறது.
- ✓ **1646** ஆம் ஆண்டில் நூலகங்களை நிறுவிய தாமஸ் போட்லே அவர்களால் பதக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. போட்லேயன் நூலகம் போட்லேயன் நூலக குழுமங்களிலேயே மிக

முக்கியமான நூலகமாகும் மற்றும் இது அளவில் பிரிட்டிஷ் நூலகங்களிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளது. முதலாவதாக **1602** இல் திறக்கப்பட்ட குழுவில் **13** மில்லியன் அச்சிடப்பட்ட புத்தகங்கள் இருந்தன.

**7)** கீழ்க்கண்ட நாடுகளில் எங்கு உலகின் நீண்ட உப்பு குகை சமீபத்தில் கண்டறியப்பட்டது? **[The world's longest salt cave]**

**A]** இஸ்ரேல்

**B]** ஈரான்

**C]** ஆஸ்திரேலியா

**D]** பிரேசில்

- ✓ இஸ்ரேலிய ஆராய்ச்சியாளர்கள் மால்ஹம் என்ற உலகின் மிக நீண்ட உப்பு குகையினை கண்டுபிடித்துள்ளனர். இது **10** கி.மீ. வரை இஸ்ரேலின் மிகப்பெரிய மலையான சேதோம் மலை வழியாக நீண்டுள்ளது.
- ✓ இந்த குகை **Dead Sea** - ன் தெற்கு முனையிலிருந்து கடந்து செல்லும் பாதைகளின் பிணையாகும். இது பாலைவன பகுதிக்கு அருகாமையில் உள்ளது. பைபிள் படி, லோத்துவின் மனைவி உப்பு தூணாக மாறியுள்ளார் என்று நம்பப்படுகிறது. மேலும் மாலஹம் குகையானது இதற்கும் முன் கண்டுப்பிடிக்கப்பட்ட ஈரான் குகையை விட பெரியது.
- ✓ ஈரானின் குஷெம் தீவில் சுமார் **6** கி.மீ (நான்கு மைல்) நீண்ட மூன்று நூதனங்கள் உடைய உப்பு குகை **2006** ஆம் ஆண்டில் ஈரான் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ✓ சேதோம் மலை என்று இதற்கு பெயர் வர காரணம், மரபணு புத்தகத்தின் படி லோத்துவின் மனைவி சேதோமை திரும்பி பார்த்ததன் விளைவாக உப்பு தூணாக மாறினாள்.

**8)** பின்வரும் எந்த இடத்தில் முப்பிரிவு சேவைகளின் இரண்டாவது பெரிய கூட்டு தளவாடம் செயல்பட்டு வருகிறது? **[The 2nd Joint Logistics Node (JLN) of tri-services]**

**A]** சென்னை

**B]** கொல்கத்தா

**C]** கொச்சி

**D]** மும்பை

- ✓ மகாராஷ்டிரா மாநிலத்தில் மும்பையில் உள்ள கடற்படைத் தளத்தில் முப்பிரிவு சேவைகளின் இரண்டாவது பெரிய கூட்டு தளவாடம் செயல்பட்டு வருகிறது. **2018** ஆம் ஆண்டில் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் மூன்று சேவைகளின் முதல் கூட்டு தளவாடம் (JLN) அமைக்கப்பட்டது.
- ✓ இந்த மையங்களில் கடற்படை, விமானப்படை மற்றும் இராணுவம் போன்ற துறைகளுக்கான அடிப்படை ஆயுதங்கள், உணவு, துப்பாக்கி போன்றவை எடுத்துச்செல்ல பயன்படுத்தப்படுகிறது. இந்த நடவடிக்கை, வளங்களைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவதோடு, மனிதவள மேம்பாடு மற்றும் நகல்களை அகற்றவும் செய்கிறது.
- ✓ இந்திய பாதுகாப்பு படைகள், தங்கள் எதிரிகளுக்கு எதிராக, குறிப்பாக பாகிஸ்தானிலிருந்து கடல் வழியைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக செயல்பட உதவுகிறது.
- ✓ கூட்டு தளவாடம் (JLN) மூன்று கூறுகளை உள்ளடக்கியது - கூட்டு தளவாட கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (**JLC & CC**), இது முழுமையான கட்டுப்பாட்டு அமைப்பாகும். **Tri-services Detachment at Material Organisation** (**TRIDAMO**), இது இராணுவப் படைகளின் தளவாட தேவைகளை பூர்த்தி செய்யவும் மற்றும் மேம்பட்ட போக்குவரத்து செய்யவும் பயன்படுகிறது.

**9]** எந்த சர்வசேத அமைப்பு, தீவிரவாத நிதிகளை எதிர்த்துப் போராடுவதற்கு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது?

**A]** உலக வங்கி

**B]** ADB

**C] UNSC**

**D] AIIB**

- ✓ ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் (**UNSC**) முதல் முறையாக உறுப்பினர்களை தீவிரவாத நிதியிற்கு எதிரான சட்டங்களை நிறைவேற்ற உத்தரவு பிறப்பித்துள்ளது. இச்சட்டமானது நாட்டின் எல்லா மாநிலங்களிலும் பயங்கரவாத குழுக்களுக்களோ அல்லது தனிப்பட்ட குற்றவாளிகளோ நிதி அல்லது நிதி ஆதாரங்களை சேகரிப்பதற்காக முற்படாமல் இருக்க அதன் உள்நாட்டு மற்றும் ஒழுங்குமுறை சட்டங்களை முறைப்படுத்தி கடுமையான கிரிமினல் குற்றங்களாக உறுதிப்படுத்துமாறு அனைத்து மாநிலங்களையும் கோருகிறது.

- ✓ மேலும் இது உறுப்பினர்களை நிதி நுண்ணறிவு பிரிவுகளை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. இத்தீர்மானத்தை நிறைவேற்றத் தவறும் நாடுகள் ஐ.நா.வின் பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ளும் என எச்சரிக்கப்படுகிறது. ஐ.நா.வின் பயங்கரவாத எதிர்ப்பு தலைவரான விளாடிமிர் வோரோன்கோவ், இந்த தீர்மானம் "சிக்கலான நேரத்தில்" நிறைவேற்றும் பட்சத்தில் அதற்குள்ளாகவே தீவிரவாதிகள் சட்டவிரோத மற்றும் சட்ட தடங்களை பயன்படுத்தி பணத்தை கைப்பற்றி விடுவர் என்று கூறியுள்ளார்.

**10)** கீழ்க்கண்டவற்றில் எந்த இந்திய நிறுவனம் நிதியியல் தொழில்நுட்பத்துக்காக (**FINTECH STARTUPS)** ஒழுங்குமுறை **SANDBOX** அமைக்க முடிவெடுத்துள்ளது?

**A] RBI** (ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா)

**B] SEBI** (இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்)

**C] Ministry of Finance** (நிதி அமைச்சகம்)

**D] IRDA** (இந்தியக் காப்பீடு ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமை)

- ✓ நிதியியல் தொழில் நுட்பத்தில் புதுமைகளை ஊக்கப்படுத்தும் விதமாக, ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா ஒழுங்குமுறை **sandbox** - ஐ பின்டெக் தொடக்கங்களுக்கு **[Fintech Startups]** அமைக்க முடிவு செய்துள்ளது. மத்திய வங்கி இதற்கான வரைமுறைகளை இரண்டு மாதங்களில் வெளியிட உள்ளது. இந்த மையம் நிறுவனங்கள் குறைந்த விலையில் புதுமையான தயாரிப்புகளை உருவாக்க உதவுகிறது.
- ✓ நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை நேரடி மற்றும் மறைமுகமாக பரிசோதித்து தீர்வுகளை வெளியிட சாண்ட்பாக்ஸ் உதவுகிறது. மேலும் இது நிறுவனங்கள் குறைந்த விலையில், குறைந்த கால அளவில் தங்கள் தயாரிப்புகளை அறிமுகப்படுத்த உதவுகிறது.
- ✓ இந்த நிறுவனங்கள் எந்தவொரு பெரிய மற்றும் மிகுந்த செலவில்லாமல் தங்களின் உற்பத்தி தரத்தை சோதித்து பார்க்க வழிவகுக்கிறது. ஒழுங்குமுறை சாண்ட்பாக்ஸ் இந்த நிறுவனங்களை ஒரு குறிப்பிட்ட வரைமுறைக்குள் நேரடி சோதனைகளை மேற்பார்வையின் கீழ் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் செய்ய அனுமதிக்கிறது.
- ✓ இந்நிறுவனங்கள் பணம் மற்றும் நிதி சேவைகள் வழங்க தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, **peer-to-peer** கடன் மற்றும் **crowd funding** போன்றவற்றை அனைவருக்கும் வழங்க வழி செய்கிறது.



winmeen.com